**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR</u>**

Case No.CC.153/2023
Prosecution witness. 07

| | |
|---|---|
| பெயர் : பிரகாஷ் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of September 2024.

<u>25.09.2024</u>

(1 முதல் 6 எதிரிகள் ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**<u>முதல் விசாரணை</u>**

**1.** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். சுமார் ஒரு வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் நினைவு இல்லை. மாலை சுமார் 05.30 மணியளவில் ஆஜர் 1ம் எதிரி சவரிமுத்து, ஆஜர் 3ம் எதிரி ஆரோக்கியம் மற்றும் அ.சா.2 அருள்பால்ராஜ் ஆகியோர் 1ம் எதிரி சவரிமுத்து வீட்டின் அருகே வைத்து சத்தம்போட்டு பேசிக்கொண்டிருந்தார்கள். நான் அவர்களை விலக்கிவிட்டு சென்றுவிட்டேன். அதன்பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) அருள்பால்ராஜ் எனக்கு மச்சான் முறை ஆவார். சம்பவம் நடைபெற்ற இடம் இருட்டான பகுதி என்றால் சரிதான். அன்று இருட்டாகும் நேரமாக இருந்தது. சம்பவம் நடைபெற்ற இடத்திற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 20 வீடுகள் தள்ளி எனது வீடு இருக்கும். எதிரிகளுக்கும் அ.சா.2க்கும் இடையே பிரச்சினை சம்பந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது என்ற விவரம் எனக்கு

தெரியுமா என்றால் தெரியாது. என்னுடன் வேறு யாரும் வரவில்லை என்றால் சரிதான்.

2) அ.சா.2 எனது உறவினர் என்பதால் அவருக்கு எதிராக நான் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.